# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
# මැතිවරණ ප්‍රචණ්ඩත්වය නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
# தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

**No:** 24/2, 28th Lane, Off Flower Road, Colombo 07
**Tel:** +94 11 2565304 – 6, 5552746, 5552749, **Fax:** +94 114714460
**E-mail:** cmev@cpalanka.org **Website:** www.cpalanka.org

**வடமாகாணசபைத் தேர்தல் 2013**

**ஊடக அறிவித்தல் இல 02**

செப்ரெம்பர் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு வடமாகாணசபைத் தேர்தல் தொடர்பான வன்முறைகளின் பின்வரும் அறிக்கைகள் CMEV ஆல் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**2013 செப்ரெம்பர் 13, கொடிகாமம் தேர்தல் தொகுதி, யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம், வடமாகாணம்:** குற்றப்புலனாய்வுப்பிரிவு அதிகாரிகள், தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர்களிடம் அவர்கள் விநியோகிக்கும் துண்டுப்பிரசுரங்கள் குறித்து கேள்வி எழுப்பியதுடன், அவர்களைக் கைது செய்யுமாறு பொலிசாருக்கு அறிவித்துள்ளதாக CMEV கள கண்காணிப்பாளர் தெரிவித்தார். திரு. சந்திரலிங்கம் சுகீர்தனின் (ததேகூ) (வேட்பாளர் இல 14) நான்கு ஆதரவாளர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்னர். கேசவன் ஜயந்தன் (வேட்பாளர் இலக்கம் 13) இடம் தொடர்பு கொண்ட பொழுது இச் சம்பவத்தை உறுதிப்படுத்தியதுடன், இவர்கள் தேர்தல் சட்டத்தை மீறியதாக பொலிசார் அறிவித்துள்ளதாக குறிப்பிட்டார். கொடிகாமம் பொலிஸ் நிலையமும் இச் சம்பவத்தை உறுதிப்படுத்தியது.

**2013 செப்ரெம்பர் 13, A32 வீதி, மறவன்புலச் சந்தி, சாவகச்சேரி தேர்தல் தொகுதி, யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் வடமாகாணம்:**

மேற்படி பகுதியில் பி.ப. 5.00 மணியளவில் ஒரு இனந்தெரியாத குழுவானது பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த திரு. கஜதீபன் (வேட்பாளர் இலக்கம் 17) ததேகூட்டமைப்பின் பத்து ஆதரவாளர்களை அச்சுறுத்தி பொல்லுகளால் அடித்தனர். தாக்குதல் நடத்தியவர்கள் அந்த இடத்திலிருந்து வாகன இலக்கம் (59-3641) தப்பிச் சென்றுள்ளனர். ஞானப்பிரகாசம் கிஷோர் மற்றும் ராஜ்குமார் ரஜிந்தன் என்போர் சாவகச்சேரி வைத்தியசாலையில் (வார்ட் இலக்கம் 6 இல்) பி.ப. 7.55 க்கு அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறான சம்பவம் இடம்பெற்றதாகவும் பொலிசார் மேலும் விசாரித்து வருவதாகவும் பொலிஸ் சார்ஜன்ட் சுனில், தொடர்புகொண்டபொழுது உறுதிப்படுத்தினர்.

**2013 செப்ரெம்பர் 14, பருத்தித்துறை தேர்தல் தொகுதி, யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் வடமாகாணம்:**

பாதுகாப்பு காரணங்களுக்காக தம்மை வெளிப்படுத்த விரும்பாத சாட்சியங்களின் பிரகாரம் 14 ஆம் திகதி இராணுவப் புலனாய்வுப் பிரிவையும், EPDP யையும் சேர்ந்த நபர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பு கூட்டம் ஒன்றுக்கு இடையூறு ஏற்படுத்தினார். தமிழ் தேசியக் கூட்டமைப்பின், கூட்டத்திற்கு சமூகமளிக்க

வேண்டாமென மக்களிடம் அவர்கள் கூறியிருந்தனர். பின்பு அக்கூட்டமானது இராணுவம் மற்றும் EPDP செயற்பாடுகளினால் ஆரம்பத்திலேயே திட்டமிடப்பட்ட சனசமூக மண்டபத்திற்கு அண்மையான பகுதியில் இடம்பெற்று இருந்தது. EPDP மற்றும் சில புலனாய்வினருடன் தொடர்புடைய ஆட்களினால் கூட்டத்திற்கு இடையூறு செய்யப்பட்டதாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு வேட்பாளர் திரு. சுகீர்தன், CMEV தொடர்புகொண்டபொழுது தெரிவித்தார். உடுத்துறை பாரதி சனசமூக மண்டப காணியின் உரிமையாளர் கூட்டத்திற்காக தனது வளாகத்தை பயன்படுத்துவதற்காக அவரால் வழங்கப்பட்ட எழுத்து மூல அனுமதியை வாபஸ் பெற்றிருந்ததாக பருத்தித்துறை உதவிப் பரிசோதகர் R.P லலித் தொடர்புகொண்டபொழுது தெரிவித்தார். கூட்டத்திற்காக பிறிதான ஒரு இடம் ஒழுங்கு செய்ய வேண்டியிருந்தது. இச்சம்பவத்தின்பொழுது ஒலிபெருக்கி அலகிற்கு சேதம் ஏற்படுத்தப்பட்டதற்கான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக எந்தவொரு முறைப்பாடும் செய்யப்படவில்லையெனப் பொலிசார் தெரிவித்தனர்.

**2013 செப்ரெம்பர் 15 சிறுப்பிட்டி தெற்கு, கோப்பாய் தேர்தல் தொகுதி, யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் வடமாகாணம்:**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்களுக்கு சொந்தமான வாழை மற்றும் பீற்றூட் பயிர்ச்செய்கைகள் அழிக்கப்பட்டுள்ளன. CMEV கண்காணிப்பாளர்கள் கிராமத்தவர்களுடன் பேசிய பொழுது, அவர்கள் UPFA ஆதரவாளர்களை களத்தில் குற்றமிழைத்தவர்களாகப் பெயரிட்டனர். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் கூட்டங்களை நிறுத்த வேண்டும் என எச்சரித்திருந்தனர். பாதிக்கப்பட்ட கிராமத்தவர்களுள் ஒருவரான திரு. உதயராசா தனது வாழைப்பயிர்ச்செய்கையின் அழிப்பின் காரணமாக ரூபா 20,000/-திற்கும் மேற்பட்ட நஷ்டத்தை அடைந்துள்ளதாக தெரிவித்துள்ளார். இவ்வாறான ஒரு முறைப்பாட்டை இக் கிராமத்தவர்களாகிய (திரு. ஐயன்பிள்ளை ரட்ணசபாபதி முறைப்பாட்டு இலக்கம் MOIB 234 – 39 மற்றும் மாணிக்கம் உதயகுமார் MOIB 236 - 40 செய்துள்ளதாகவும் இவ்விடங்களுக்கு பொலிஸ் அதிகாரிகளை அனுப்பியதாகவும் அச்சுவேலி பொலிசார் உறுதிப்படுத்தினர். பொலிசார் இச்சம்பவத்தை EIB புத்தகத்தில் பதியாமல் வேறு இடத்தில் பதிந்திருப்பதை CMEV அவதானித்துள்ளது.

எவ்வாறாயினும் UPFA வேட்பாளர் திரு. அப்துல் கமீட் நவுமான் சிராஸ் மொஹமட் இன் ஆதரவாளர்களே இத்தாக்குதல்களுக்கு பொறுப்பானவர்கள் என் கிராமத்தவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். இச் சம்பவம் தொடர்பில் CMEV தொடர்புகொண்டபொழுது குற்றச்சாட்டை அவர் மறுத்துள்ளதுடன் சிறுப்பிட்டிக்கிராமத்தவர்களுக்கு கணிசமானளவு உதவி வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.

| | | |
|---|---|---|
| கலாநிதி பா.சரவணமுத்து | சுனில் ஜயசேகர | உதய கலுபதிரண |
| இணை-அழைப்பாளர் | இணை-அழைப்பாளர் | இணை-அழைப்பாளர் |